


மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் விருதுநகர் மாவட்டம்

வெங்கடாசலபுரம் ஊராட்சி

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம் /ஊராட்சி ஒன்றியம், வெங்கடாசலபுரம் ஊராட்சி, படந்தால் கிராமம் நில அளவை எண்: 171/1A,172/2C4 -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

(திட்டமில்லாத பகுதி)

இணையதள பதிவு எண்: H7U9XTEM

அளவு : 1 : 800

வ

குறிப்புகள்:-

மனைப்பிரிவின் இடத்தின் பரப்பளவு	–	8539.00ச.மீ (2.11ஏக்கர்)
உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் பரப்பளவு மூலை முடக்குகள் உட்பட	–	3508.78ச.மீ
சாலை நீங்கலாக மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு	–	5030.22ச.மீ
மனைப்பிரிவு இடத்தின் எல்கை	–	
நிலையில் உள்ள சாலை	–	

ஒதுக்கிய மனைகளின் எண்ணிக்கை:-

சாதாரண வகை மனைகள் (மனை எண்கள்- 1-22)	–	22 எண்ணம்
மொத்த மனைகளின் எண்ணிக்கை	–	22 எண்ணம்

பொது ஒதுக்கீடுகள்: (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யபட்டது)

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் சுற்றறிக்கை ந.க.எண்- 4367/2019- நாள் 05.02.2020 மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்-2019 விதிஎண்: 47(6)-ன் படி ஒட்டுமொத்த மனைப்பிரிவில் சாலை மற்றும் மூலை முடக்கு பரப்பளவு கழித்தது போக மீதம்முள்ள பரப்பளவில் 10% பூங்கா கணக்கீடு செய்யபட்டு இந்த பரப்பிற்கு இணையான உரிய கட்டணத் தொகையினை அரசு வழிகாட்டு மதிப்பின்படி மனுதாரரால் செலுத்தப்பட்டது.

உத்தேச மனைப்பிரிவு சாலைகள்	–	3508.78ச.மீ	
பசுமை புல்வெளி பகுதி	–	130.53 ச.மீ	
உள்ளாட்சி உபயோகத்திற்கு	–	32.06 ச.மீ	(0.64%)

தானஆவண எண் :- 2790/2025 (நாள்:- 19.03.2025)

தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக (TANGEDCO) உபயோகத்திற்கு	–	32.39 ச.மீ	(0.64%)

தானஆவண எண் :- 2789/2025 (நாள்:- 19.03.2025)

கட்டிட வரம்பு

9.00மீ அகலத்திற்கு கீழ் உள்ள சாலைகளுக்கு 1.50மீ விடப்பட வேண்டும்

9.00மீ அகலத்திற்கு மேல் 18.0மீ அகலம் வரை சாலைகளுக்கு 3.0மீ விடப்பட வேண்டும்

மூலை முடக்கு

12.00மீ அகலத்திற்கு கீழ் உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ விடப்பட வேண்டும்

நிபந்தனைகள்:

1) அரசாணை எண்:18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்- 04.02.2019-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

2) அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள்- 31.01.2020-ன் படி உள்ள நிபந்தனைகளை கடைபிடிக்க வேண்டும்.

3) இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கபடவில்லை என்றும் நில ஆர்ஜிதம் செய்து தரக்கோரி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ளவேண்டும்.

4) நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

5) விய்பனைக்குண்டான மனைகளை விற்பனை செயயும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6) நகர் ஊரமைப்பு துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில் நுட்ப ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகைப்பத்திரம் - பட்டா - தானப்பத்திரம் - பொது அதிகார ஆவணம் மற்றும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளலம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பு துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7) நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

8) ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைபடபிரிவு நுழைவாயிலில் 6x4 -அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

9) நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லதக்கது அல்ல.

10) இம்மனைப்பிரிவில் இருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டள்ள மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட கூடாது.

குறிப்பு:

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது

ம.வ/ந.ஊ.து.இ. (விருமா) எண்:- 57/2025

அளவர் | வரைவாளர் நிலை- III | மேற்பார்வையாளர் | உதவி இயக்குநர்

துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விருதுநகர் மாவட்டம்

Signature valid
Signed by: Assistant Director
Location:Virudhunagar
Date:2025.03.25 17:50:30

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Virudhunagar
Date:2025.11.13 06:06:52